"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (தனி வகைமுறை) சட்டமுன்வடிவு, 2010 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2010* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி *(தனி வகைமுறை)* சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (தனி வகைமுறை) சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி *(தனி வகைமுறை)* சட்டமுன்வடிவு. *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

2010 நவம்பர் 11]

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (தனி வகைமுறை) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2010–2011, விவாதமும் வாக்கெடுப்பும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011* ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம் தொடர்ச்சி. (குறுக்கீடு) முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக, ஒதுக்கப்பட்ட நேரம் *15* நிமிடங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தி. வேல்முருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)